By nature he is emotional and straight forward. He loves children. He does not belive in dogmatic religion. He does not hate anyone. He is a cosmopolitan. He plays games and practises asanas regularly; He rises early from bed. He works very hard for the welfare of our country.

He loves peace. He wants to be friendly with all nations. He is respected all over the world. He is a friend of all good causes. His only ambition in life is to make our country prosperous and strong. He wants to make India a true welfare state. May Nehru live long and healthy is our prayer.

K. Mahadevan,

IV Form A.

Activities of the School

TAMIL LITERARY ASSOCIATION

In the beginning of this academic year, the Tamil Literary Association was divided into two groups namely The Senior boys Literary association and the Junior boys literary association. The inaugural meeting was presided over by Sri Govinda Rajappillai, Professor of Tamil, Presidency College, Madras. Following this occasion several meetings were arranged for both the groups and presided by different men.

S. NATARAJAN,
Tamil Pandit.
Vice-President.

EXCURSIONS

(M. S. VARADARAJAN)

Every class had five or six excursions during the course of the year besides a long excursion to Mahabalipuram accompanied by most of the staff. The excursions were fairly distributed throughout the year. The addition of a Rhinoceros to the zoo induced us to take the whole school there batch by batch. The higher forms were specially taken to Ganga Soap Works and the process of making soap was completely explained to them stage by stage, by our chief science Master. Our higher forms enjoyed very much the exhibition at the S.I.A.A. grounds. No doubt it must have given much food for thought to our pupils. When people come from far and wide to see and enjoy the Pallava architecture, it is needless to say that our pupils enjoyed it immensely and gained much historical knowledge.

CUB AND SCOUT SECTION

The year started with 15 cubs and 3 scouts on the rolls. Ten new entrants joined the cub pack and there are 25 cubs on the rolls now.

The cubs as usual had their classes of instruction and games. They were the participants in all the activities organised by the East Madras Bharat Scout and Guides in Rallies, Scout Week celebration and other entertainments.

We are proud to say that two of our cubs won prizes in handicraft competition.

Our cubs had the opportunity of enjoying the open air and camp life at Avadi (Dr. Lakshmipathi Gardens).

More efforts are taken to strengthen the Scout section by the academic year and be useful to serve the public in years to come.

Our main aim of both the sections is to prove true to the word

'SCOUT' letter by letter ie

'S	C	O	U	T'
E	U	U	N	R
R	R	T	I	U
V	T	I	T	T
I	E	N	Y	H
C	O	G	.	F
E	U	S.		U
.	S			L.

Wishing good scouting in years to come.

(G. S. L.)

REPORT OF THE RADIO CLUB 1953-'54.

As the school is provided with a nice Radio Receiver a Radio Club is functioning very enthusiastically throughout the year.

Straight from August 1953 to the end of February 1954 totally forty three Radio programmes were arranged for the pupils from V class to VI Form, everyday a class or two attending the Radio class under the Supervision of the period teacher and under the guidance of the teacher in charge of the Radio Club.

All the pupils enjoyed the Radio programmes on different subjects which were always related to their lessons. These benefitted the pupils and made the lessons lively.

During January 1954 our school was asked to prepare to enact a drama "Ekalaivan" at the All India Radio. Egmore on 10th March 1954. The teacher in charge of the Radio Club helped pupils to prepare the dialogue of the drama "Ekalaivan". Seven selected pupils from the V and VI Forms gave the performance on 10th March 1954.

Distribution of Radio classes:

Before Quarterly Examination 1953	—	7 classes
Before Half yearly Examination 1953	—	19 classes
After Half yearly Examination 1954	—	17 classes
Total	—	43 classes

VI Form	—	16 Radio classes
V Form	—	11 "
IV Form	—	8 "
III Form	—	9 "
II Form	—	6 "
I Form	—	6 "
V Class	—	2 "

S. J. RICHARD, (In charge of Radio Club),

Sports activities of our School for the year 1953-54

The year 1953-54 has been a year of progress and improvement in Sports Activities in the sphere of physical Education of the School.

Our aim is the cent percent participation in all activities and the pupils of all forms are encouraged by creating the incentive, by supplying Games and Sports materials liberally and coaching them regularly and systematically based on scientific principles.

The boys were taught to know the value of Physical Educational how best they could use their skills for build ing up the society for the present and the future and how they could develop the latent quality of leadership and how to increase the Power of Endurance bearing in mind the service and sacrifice they have to do for the well-being of the society.

Our boys competed in the Madras Schools Athletic Association Zonal Sports and Matches and proved themselves to be good Sportsmen and Good Atheletes. Our Volley Ball Team headed by the Team Captain D. Natarajan VI Form played enthusiastically showing their best skill; their performance and the way in which they behaved were well appreciated by the allied schools. The match was well organised well captained and well played worthy of calling "A Good Volley Ball Match."

We also have had equally good team of Foot Ball. The Foot Ball Match was well appreciated in general and in particular, the keenness with which S. Ganesan V. Form B stood as a born Goal-keeper and played a marvellous game. His performance as a goal-keeper was appreciated by most of the Zonal secretaries and he was well praised and applauded. The Goal-keeper did yeoman service in the foot ball match as a goal-keeper.

The annual Sports of the school for this academic year came off on 9-3-54 at the Marina Grounds. Opportunity was given to all the boys of the school to participate

They were divided into three groups according to age and physical measurements. The following students won the championship in the respective group :—

Senior	(1) S. Kuttiappan	IV	Form B.
Intermediate	(2) R. Umapathy,	V	"
Junior	(3) G. Gopal,	VI	"

There was also a Dash and a Team competition for the members of the staff. Sri T. S. Nagarajan won the First place in 100 metres Dash. There were two equally strong team of Tug-of-war. Three chances were given. The first chance gave an easy success to the team captained by Sri N. S. Viswanathan and in the second pull the team captained by Sri S. Sankaran was about to win but the rival team was equally strong used its full vigour and tactics and pulled off their rival team. The second pull of Tug-of-War was very thrilling and was very much appreciated by the student body and the spectators.

Old boys of this institution were given an opportunity to show their skill in 800 metres race. Many participated. N. Kannan won the first place and P. Rajamanickam the second.

P. THUMBURAJALU,
Physical Education Teacher.

FIND OUT CORRECT WORDS

1. What is called 'Big-Ben'?
   (a) a clock in London (b) highest pen in the world (c) Kutbminar. [ ]
2. What is meant by the Amazons?
   (a) a river in Africa (b) Warlike women (c) Warriors. [ ]
3. An animal that can't swim.
   (a) Tiger (b) Lion (c) Camel. [ ]
4. Tell me the length of a typewriter ribbon?
   (a) 40" (b) 40' (c) 25'. [ ]

Answers: (1) A (2) B. (3) C. (4) C.

By N. R. DHARMALINGAM,
V Form A.



Good bye to the Shore



Trivandrum ?

Mahisha Asura Mardhani



CAVE TEMPLE



THIRUPPORUR THROUGH THE AWNING



THIRUPPORUR



THIRUPPORUR TEMPLE AND TANK.

மாணவர் மாண்பு

"மாண்புடை யீரே மாண்புடை யீரே
மாணவர் மாண்பினைச் செப்பப் கேளீர்
மாணவர் என்போர் மதிமிக் குடையோர்
தாம்முயல் கருமம் தாமே முடிப்போர்
தீநெறி விழையார் நன்னெறி தன்னை
தேனெனப் பருகுவர் "ஞமிறே போல்வர்"

"பாடம் போற்றல்" என்னும் மாண்பினை
நாளும் வேண்டும் நாட்டம் உடையோர்
மெய்மை யன்றிப் பொய்ம்மை தன்னை
தன்மெய் வாடினும் இன்னுயிர் போயினும்
கனவிலும் கருதா கைதவ முடையோர்
காரென வழங்கும் சொல்வள முடையோர்
கடலெனக் குமுறும் தறுகண் ணுடையோர்
அன்ன புகழுடை இளமையைக்
கொன்னே கழித்தல் மன்னே தவறே"

ஆக்கியோன்,
சி. இராசகோபாலன்,
தமிழாசிரியர்.

பெண்களைப்பற்றி பல பெரியோர்களின் கருத்துக்கள்

1. ஆடவர் பெண்களின் விளையாட்டு பொம்மைகள். பெண்கள் பேய்களின் விளையாட்டுப் பொம்மைகள்.

—விக்டர்ஹ்யூகோ

2. பாலை விரும்பாத பூனை கிடையாது. பொன்னை விரும்பாத பெண் கிடையாது.

—கிரே

3. சாமர்த்தியத்தாலோ அல்லது பலவந்தத்தாலோ ஒரு பெண்ணின் பிடிவாத வேகத்தை மாற்றிவிடலாம் என்று நினைப்பவன் சர்வ முட்டாள்.

—சாமுவேல் ட்யூக்

4. ஆடவர் குணம்மாறினல் சொர்க்கம் பூமியாக மாறுவது போலிருக்கும். ஆனல் பெண் குணம்மாறினல் சொர்க்கம் நரகமாக மாறுவதுபோல் இருக்கும்.

—மகாகவி டென்ஜிஸன்

5. ஆண் வர்க்கங்களைவிட பெண் வர்க்கங்கள் மிகவும் ஆபத்தானது.

—ருட்யார்ட் கிப்ஸ்ங்

6. பெண்கள் எல்லாம் நாய்களே. அவர்கள் நாய்களைப்போல் கொஞ்சமும் மனந்தளராமல் காதலிக்கிருர்கள். வைதாலும் சந்தோஷமாக வாலை ஆட்டிக்கொண்டு நம்மை சுற்றிச்சுற்றி வருகிருர்கள்.

—மேரி ராபர்ட்ஸ்ரைன் ஹாட்ர்

7. உன்னையே நீ பாழாக்கிக்கொள்ளவேண்டுமானல் உன்னை விட பணக்காரி ஒருத்தியை கலியாணம் செய்துக்கொள்.

—மைக்லேட்

8. இந்த பூமியில் மட்டமான ஸ்திரீ ஒரே ஒருத்திதான் உண்டு. ஆனல் அந்த மட்டமான ஸ்திரீ தன் மனைவி என்று ஒவ்வொரு புருஷன் நினைப்பது மிகவும் பரிதாபம்.

—லௌங்ஸி

9. இளம் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் காமநூல் கல்வி பயிற்றுவிப்பதை நான் மனப்பூர்வமாய் ஆதரிக்கிறேன்.

—மகாத்மா காந்தி

10. பொன்னை வாங்க விரும்பாத பெண்களை நான் பார்த்ததே இல்லை ; ஒரே ஒருத்தியைத் தவிர! அந்த ஒருத்தி வைரங்களை வாங்கினாள்.

—ராபர்ட் வால்போல்

11. பெண்களை அழகிகளாகப் படைக்கும்போதே அவர்களை நச்சுப்படிந்த பிறவிகளாகவும் ஆக்கிவிடுவதே ஆண்டவனின் அற்புதமான வழிகளில் ஒன்றாகும்.

—பெர்னாட்ஷா

12. மறுபடியும் நான் அடங்கி நடக்கக்கூடிய ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பினால் கருங்கல்லால் செய்து இருக்கும் மனைவியைத்தான் தேடியலைய வேண்டும். ஏனெனில் பெண்களின் அடக்கத்தில் இனியும் எனக்கு நம்பிக்கை கிடையவே கிடையாது.

—மார்டின் லூதர்

13. பெண்களுக்கு மதிப்பளிக்காத எந்தத் தேசமும், நாடும் என்றும் பெருமை அடைந்ததில்லை. எதிர்காலத்திலும் அடையப் போவதில்லை.

—சுவாமி விவேகானந்தர்

14. மனைவியும், தூக்கு தண்டனையும் தலைவிதியில் உண்டாவது.

—மகாகவி ஷேக்ஸ்பியர்

15. ஒரு பெண் தன் ஆடைகளை எவ்வளவு சுலபமாய் மாற்றிக் கொள்வாளோ, அவ்வளவு சுலபமாகவே நிமிஷத்திற்கு நிமிஷம் தன் மனதையும் மாற்றுவாள்.

—பிரான்ஸிஸ் பேகன்

16. ஒரு பெண் பேசினால் பெரும்பூமி அதிரும். இரு பெண்கள் பேசினால் ஆகாயத்திலிருந்து நக்ஷத்திரங்கள் விழும். மூன்று பெண்கள் பேசினால் கடல் வற்றிப்போகும். பல பெண்கள் பேசினால் உலகம் என்ன ஆகுமோ. !

—ஒரு தனிப்பாடல் கருத்து

17. நரிக்கு வால்போல பெண்ணுக்கு நாக்கு தான் முக்கிய அவயவம்.

—பிரெஞ்சுப் பழமொழி

18. பெண்களுடன் சிறிது ஒதுங்கி இருந்து பழகுவதே ஆண்களுக்கு அழகு.

—ரவீந்திரநாத் டாகூர்

19. பெண்ணானவள் தூக்கு மேடைக்குப் போகும் தருணத்தில் கூட தன் அலங்காரத்தை முடித்துக்கொள்ள இன்னும் கொஞ்சம் நேரம் கேட்பாள்.

—சாம் போர்ட்

20. வாழ்ந்த வீட்டைக் கெடுக்க நான்கு பெண் குழந்தைகளும், வைக்கோல் போருக்கு ஒரு எருமையும் போதும்.

—பழமொழி

21. ஆண்கள் அலுத்துப்போய்க் கல்யாணம் செய்கிறார்கள், பெண்கள் அதிசயப்பட்டுக் கல்யாணம் செய்கிறார்கள், இருபாலாரும் முடிவில் ஏமாந்து போகிறார்கள்.

—ஆஸ்கார் ஒயில்ட்

22. மனிதன் சாவினிடமிருந்து தப்பிவிடலாம். பெண்ணிட மிருந்து தப்பமுடியாது.

—மாக்ஸிம் கார்க்கி

23. யாராவது தானும் தன் மனைவியும் சண்டை போடுவதில்லை யென்று சொன்னால் எனக்கு சந்தேகம் பிறக்கிறது. அவன் ஒன்று பொய்யனாக இருக்கவேண்டும். அல்லது அவன் திருமணத்தில் ஏதோ தவறு இருக்க வேண்டும்.

—பேகால்

தொகுத்தவர்,

வி. கோபாலகிருஷ்ணன்,

ஆசிரியர்.

' துப்பறியும் சேகர் "

சத்திய மங்கலம் ஜமீனில் கூத்தும் கும்மாளமுமாக இருந்தது ஏன் ? அன்று திருவிழா. திருவிழாவைப் பார்க்கவேண்டும் என்று மிகவும் விரும்பினான் இளைய ஜமீந்தார் சுந்தர். இவன் சத்திய மங்கலம் ஜமீன்தாரான வேதாசலத்திற்கு ஒரே மகன். இவனைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். அதனால் அவன் ஆசையைப் பூர்த்திசெய்ய தன்னுடைய வேலைக்காரனை முனியனுடன் அனுப்பினார். சுந்தர் நகைகள் எல்லாம் அணிந்து இருந்ததால் முனியனிடம் பத்திரமாக அழைத்துக்கொண்டு வரும்படி சொல்லி அனுப்பினார். சுவாமி ஊர்வலம் வந்துகொண்டு இருந்தது. முனியனும் சுந்தரும் இருந்தஇடம் வந்தது. முனியன் சுவாமியை தரிசித்துக்கொண்டு இருந்தபொழுது சுந்தரை யாரோ பிடிப்பது போன்று இருந்தது. சுந்தர் கத்த வாயைத்திறந்தான் வாயில் துணி அடைக்கப்பட்டது. உடனே அந்தஉருவம் சந்து பொந்துகளில் நுழைந்து ஊர் வெளியேஉள்ள காட்டுப்பாதை வழியாக சென்று கொண்டு இருந்தது. அந்தக் காட்டுபாதையில் இரவு 7 மணிக்கு மேல் ஜனநடமாட்டமோ வண்டிகளின் நடமாட்டமோ இருக்காது. அங்கு வீராசாமி என்பவன் வசிப்பதாகவும் அப்பக்கம்போனால் அடித்து பணத்தை கொள்ளையடிப்பதாகவும், கேள்வி அவனை யாரும் பார்த்ததேயில்லை. அந்த உருவம்தான் வீராசாமி. அவன் பகல் எல்லாம் ஊருக்குள் கொள்ளையடிப்பான். இரவில் பாதையில் எதாவது வண்டிவரும்சத்தம் கேட்டால் அவர்களை வழிபறித்து பணத்தை பிடிங்கிக்கொண்டு அவர்களை அவனுடைய குகையில் அடைத்து விடுவான். கடவுளைத் தரிசித்துவிட்டு திரும்பி பார்த்தான் முனியன். அங்கே சுந்தரைக் காணவில்லை. கத்தினான். கதறினான். ஓடிப்போய் ஜமீந்தாரிடம் நடந்ததைச் சொன்னான். ஜமீந்தார் உடனே போலீஸுக்கு போன் செய்தார். சிறிது நேரங் கழித்து. டக்டக் என்ற சத்தம் கேட்டது. துப்பறியும் நிபுணர் சேகரும் இன்ஸ்பெக்டர் ராஜனும் ஐந்தாறு போலீஸ் ஜாவான்களும் வந்தனர். ஜமிந்தார் வேதாசலம் நடந்ததை சொன்னார். உடனே துப்பறியும் நிபுணரான சேகருக்குத்தான் கேள்விப்பட்ட வீராசாமியின்மேல் சந்தேகம் வந்துஇருந்தாலும் அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல் இருந்தார். பிறகு எல்லோரும் போய்விட்டனர். ஐந்தாம்நாள் காட்டுபாதைவழியாக வேகமாக ஒரு கார் வந்து கொண்டுஇருந்தது. டுமீல் டுமீல். கார் நின்றது. ஒரு புதரிலிருந்து வீராசாமி வெளிவந்தான். அவன் உள்ளேயிருந்த ரத்தினவேலு முதலியார் அவர்களை பயமுறுத்திப் பணத்தை பெற்றுக்கொண்டு அவரை விட்டுவிட்டான். பிறகு எங்கேயோ ஓடிமறைந்தான். நேரே ரத்தின முதலியார் போலீஸில் நடந்ததைச் சொன்னார். இப்படியாக

பல கொள்ளை கொலைகளைச் செய்துவந்தான் வீராசாமி. ஒருநாள் ஒரு சேட் காரில் காட்டுபாதை வழியாக வந்துகொண்டு இருந்தார். அவருடைய கார்ரோக்கி டுமீல் டுமீல். கார் நின்றது. வீராசாமிவந்து சேட்டைப்பார்த்து காடே அதிரும்படி சிரித்தான். சேட் காரை விட்டு இறங்கினர். அவர் வீராசாமியை பார்த்து பயப்படுவதைபோல் யார் என்று கேட்டார். உடனே அவன்பேரை சொல்லிவிட்டு பணத்தைஎல்லாம் எடுத்துக்கொண்டு சேட்டையும் டிரைவரையும் பிடித்துக்கொண்டுபோய் தன் குகையில் ஓர் அறையில் அடைத்து பூட்டு போட்டுவிட்டான். இரவு 12 மணி இருக்கும். சேட் தன் பையிலிருந்து ஏதே ஒரு புட்டியை எடுத்தார் அதை திறந்தார் அதிலிருந்த திரவத்தை பூட்டின்மேல் ஒரு சொட்டு ஊற்றினர் பூட்டு பற்றி எரிந்து கீழே விழுந்தது. கதவு திறக்கப்பட்டது. சேட் மறைந்து மறைந்து குகைக்கு வெளியேவந்து சுற்றும்முற்றும் பார்த்தார் அங்கு ஆந்தை அலறியது. நரி ஊளையிட்டது. இதையெல்லாம் பொருட்படுத்தாமல் சாலையில் வெகுவேகமாக ஊரைநோக்கி ஓடினர் சேட் ஊருக்குள் வந்தார். போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடியது போலீஸ் ஸ்டேஷனில் எல்லோரும் தூங்கிக்கொண்டு இருந்ததைப்பார்த்து நேரே இன்ஸ்பெக்டர் ராஜனிடம் சென்று அவரை எழுப்பினர். அவர் எழுந்து யாரது என்றார். யாருமில்லை நான்தான் துப்பறியும் சேகர் என்றார். இன்ஸ்பெக்டர் நமஸ்காரம் போட்டுவிட்டு என்ன ஏன் இவ்வேளையில் இங்குவந்தீர்கள் என்றார். இப்பொழுது அவசியமாகத் தாங்கள் போலீஸ் படைகளுடன் என்னுடன் வரவேண்டும் என்றார். எங்கே என்று இன்ஸ்பெக்டர் கேட்டார். வீராசாமியைப் பிடிப்பதற்கு என்றார்; உடனே போலீஸ் குகையைக் பார்வையிட்டது. வீராசாமி பிடிபட்டான். அதுவும் அன்றி ஜமீந்தார் வேதாசலத்தின் மகன் சுந்தரும் கிடைத்துவிட்டான் அவன் கொள்ளையடித்த பணத்தை உரியோர்க்கு கொடுத்துவிட்டார். அரசாங்கம் வீராசாமிக்கு ஆயுள் தண்டனை கொடுத்தது. துப்பறியும் சேகருக்கு ஜமீந்தார் வேதாசலம் தன் மகனை கண்டுபிடித்ததற்கு ரூ 1000 இனும் கொடுத்தார். அவருக்கு வீராசாமியை பிடித்து கொடுத்ததற்காக ரூ. 10000 இனமாக அரசாங்கம் கொடுத்தது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

நான் மெச்சும் மகான்

ஜோசப் விசாரியனோ ஸ்டாலினைப்பற்றி அறியாதவர் இல்லை. அவர்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

என்ற பொய்யாமொழிக் கேற்ற வாழ்ந்தார்.

உலகில் ஆண் பெண் என்ற பிரிவு இருப்பது போல ஏழை, பணக்காரன் என்ற கொடூரமான குணமும், பாகுபாடும் மக்களிடம் காணப்பட்டு வருகிறது.

பணக்காரன் ஓர் தெய்வப் பிறவி, அவன் முற்பிறவியில் அநேக தர்மங்கள் செய்தான். அதனால் இப்பொழுது பணக்காரனாக இருக்கிறான். அவனுக்கு மற்ற ஏழைகள், உழைத்து உழைத்து உருக்குலைய வேண்டும் என்ற மூடநம்பிக்கை மூடு பனியைப்போல் மக்களின் அறிவை மூடிக்கொண்டே வருகிறது. நம் நாட்டில் ஓர் பழமொழி உண்டு, "பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்" என்று. அம்மொழியின்படி இந்தக் கொடியவர்களின் கூற்றம் எத்தனை நாளைக்குத்தான் இருக்கும்? பகலவனைக் கண்டபனிபோல அந்த மூட நம்பிக்கை ஏன் மிருக நம்பிக்கை ஜோ வி. ஸ்டாலினால் ருஷியாவில் அறவே ஒழிந்தது.

இதை அதாவது இந்த மூடத்தனத்தை பலர் எதிர்த்தனர். ஆனால் அவ்வளவு துணிகரமாகவும், ஊக்கத்துடனும் அவர்களால் ஒழிக்க முடியவில்லை.

ஏழையானவன் கேவலம் மாடுகளைப்போன்று, கீழ்த்தரமாக, அறிவற்றத்தரமாக, மனித இயல்பிற்கே பொருந்தாத முறையில் நடத்தப்பட்டான். அவன் ஒருநாளில் அதாவது இருபத்து நான்குமணியில் பத்தொன்பது மணிகள் வேலை செய்யவேண்டும். செய்தும் உள்ளான். ஆனாலும் அவன் உயரவில்லை. நம் நாட்டை ஆங்கிலேயன் ஆம் வெள்ளையன் இருக்கிறானே வெள்ளையன் அவன் சுரண்டினது போல, ஏழைகளின் உழைப்பைச் சுரண்டினான். அதை எதிர்த்துக் கேட்டால் எதிர்த்த ஏழை மிருகத்தனமாகக் கொல்லப்பட்டான். என்னே அறிவீனம்!! இதை எதிர்த்து ஒழிக்க எந்த தலைவரும், எந்த மதாச்சாரிகளும் முற்படவில்லை. தயங்கித்தயங்கி தங்கள் நாட்டு ஏழைகளை பணக்காரப் பேய்க்குப் பலிகொடுத்தனர். இதைத் தான் தடுத்தார் ஒரு மகான்! ஆம் ஜாரின் ஆட்சியிலே குட்டிச்சுவாராகக் கட்டப்பட்ட ருஷ்யா வேலையில்லாத் திண்டாட்டம், பஞ்சம், பட்டினிச் சாவு, முதலியவைகளில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தது உழைத்தான் உழைப்பாளி, ஆனால் உருபடவில்லை அவன். உழைப்பிற்கு பணம் அவனுக்

குக் கிடைக்கவில்லை. பட்டினிக் கிடந்தான். தன் மனைவி மக்களோடு எத்தனையோ குடும்பங்கள் கொலையும் புரிந்துள்ளன. கோரம் கோரம்!! இந்த அக்கிரமத்தை அழித்தார் அம் மகான்.

எத்தனைப் பணக்காரப் பூதங்களின் நெஞ்சில் எரிமலை உண்டாகி, வெடித்து, வயிறு எரிந்திருக்குமோ? உழைத்து, உருக்குலைந்த, உழைப்பாளியின்; உத்தமர்களின் உள்ளத்தைக் குளிரச் செய்தார்! செய்தார்களா யாராவது? கூறத்தான் முடியுமா? சொல்லுங்கள். எந்த மகானும் செய்தது கிடையாது. உலக சரித்திரத்தை அந்தப்பக்கமும், இந்தப்பக்கமும் திருப்பிப் பாருங்கள். அப்போதும் இவரைப் போன்ற உழைப்பாளிகளுக்கு உகந்தவர்கள் காணப்படமாட்டார்.

இப்பொழுது ருஷ்யா யாவரும் போற்றும் படியாக, ஆம் ருஷ்யாவின்மேல் ஆத்திரம் உள்ளவர்களுக்கும் கூட போற்றும் முறையில் மக்கள் அனைவரும் உழைப்பிற்கு உகந்த கூலியல்லாமல் தேவைக்குத் தகுந்த கூலி வாங்குகின்றனர். இதை நான் கூறவில்லை. காந்தியின் சீடர் ஜே. சி. குமரப்பா கூறுகிறார். இப்பொழுதாவது நம்ப முடிகிறதல்லவா? ஏன் அவ்வளவு தூரம் நமது சரித்திரப் புஸ்தகத்தையே புரட்டிப் பாருங்கள். அதில் எந்த நாடும் இவ்வளவு குறுகிய காலத்தில், ரஷ்யாவைப்போல பொருளாதாரத் திட்டத்தினால் மக்கள் சுகமாக வாழ வழி தேடியதில்லை. ஆம் முன்னேற்றம் அடையவில்லை." இதற்கெல்லாம் காரணம் ஸ்டாலின்: உலகிற்கு வழி காட்டிய அம்மகான் இப்பொழுது உலகில் இல்லை. ஆனால் அவர் காட்டிய வழி உள்ளது. நாமும் பணக்காரர்களின் பகுத்தறிவிற்கே அப்பாற்பட்ட பண்டைப் படுகுழி தோண்டி புதைத்து நம் நாட்டை முன்னிலைக்குக் கொண்டுவர கல்வி முடிந்தபின் முயற்சிப்போமாக.

ப. க. சண்முகம்,
நான்காம் படிவம் "அ" பிரிவு.

விடுகதை

1. செக்க சிவந்திருப்பான். செவ்வாழை போலிருப்பான். வாலும் முளைத்திருப்பான். வந்திருப்பான் சந்தையிலே. அது என்ன?

விடை

1. மிளகாய்

Lakshminarasimhan,
IV, Form-A.

நாகரிகம்

நாகரிகம் தற் காலத்தில் இரண்டு வகையில் அமைந்துள்ளது. அதாவது ஒன்று நம் நாட்டு நாகரிம். மற்றொன்று மேனாட்டு நாகரிகம் ஆகும். அன்பு, அருள், அடக்கம், அறிவு இவைகளே நம் நாட்டு நாகரிகம் ஆகும். உடை, உணவு, செல்வச் செருக்கு இயந்திரப் பெருக்கம் முதலியன மேனாட்டு நாகரிகம் ஆகும்.

சிலர் ஒருவரின் கெட்ட செயல்களைக்கண்டு "மிருகத்தனம்" எனக் கூறுவதை நாம் பல முறை கேட்டிருக்கிறோம். அதேபோல் தான் நற்குண நற்செய்கைகள் உள்ள ஒருவரைக் கண்டு "நாகரிக மனப் பான்மை உள்ளவன்" எனத் தன்னையறியாமலே பலர் கூறக் கேட்டிருக்கிறோம். இதனால் நாம் என்ன அறிகிறோம்? நாகரிகம் மனிதத் தன்மையோடு ஒட்டி உண்டானது என அறிகிறோம்.

மேனாட்டு நாகரிகத்தை ஒரு கொடிய கூற்றுவனும் எளிதில் அடைந்து விடலாம். ஆனால் நம் நாட்டு நாகரிகத்தை எவனொருவனும் எளிதில் அடைந்து விடலாம் என்று யாரேனும் கூறக்கேட்டிருக்கிறீர்களா! மேனாட்டு நாகரிகந்தான் உண்மையான நாகரிகம் எனக் கூறுகிறீர்களே, சிங்மன்ரி, மலான் இவர்கள் நாகரிக நாடு எனக் கூறும்படித்து வாழ்பவர்கள். நாகரிகததிற்கே முக்கிய சிறப்பைத்தரும் ஆகாய விமானங்கள்தான் இவர்கள் நாட்டில் இல்லையா? பின் ஏன் இவர்களை சிறுவர் முதல் பெரியோர் வரை வெறியர்களாக கருதுகிறார்கள். இராமாயணத்தைப் புரட்டிப் பார்த்தால் அதிலே இராவணன் என்னுமொரு அரக்கன் இருக்கிறான், அவனுடன் ஆகாய விமானம் இருந்ததே, பின் ஏன் அவனை அநாகரிகமானவன் எனக் கூறப்படுகிறது. அதே முறையில்தான் சிங்மன்ரியையும், மலானையும் கருதுகின்றனர்.

அறிவை அனர்த்தமான முறையில் அர்ப்பணித்து அணுகுண்டை அடைந்து அண்டை அயல் நாடுகளை, அழிப்பதும் அடிமையாக்குவதும் எப்படி நாகரிகமாகும்? இவை அநாகரிகத்தின் அச்சாணியல்லவா? இதை நாகரிகம் எனக் கூறினால் நகைப்புக்கிடமாகும். ஆனால் மேனாட்டு நாகரிகத்தை தழுவக் கூடாதா என்று கேட்கலாம். நம் நாட்டு நாகரிகத்தில் திளைத்துள்ள ஒருவன் மேனாட்டு நாகரிகத்தை கைக்கொள்வது தப்பிதமில்லை. ஆனால் மேனாட்டு நாகரிகம் நம் நாட்டு நாகரிகத்தைவிட சிறந்தது எனக கூற முடியாது.

நாதியற்றவன் நாலுகாசு இல்லாதவன் ஓர் நடைப்பிணம். நா வறள கத்துகிறான் நாலு காசு வாங்க நாகரிக மக்களிடம். ஆனால் அவனுக்குக் கிடைத்த பதில் பாருங்கள். "கையுலே காசு இல்லேப்பா" இது அரிச்சந்திரனின் அப்பட்டமான உண்மை! யார்

என்ன செய்வது எல்லாம் அவனவன் செய்த கருமம் இது. தத்துவ ஞானியின் தத்துவத்தோடு கூடிய வாக்கு. ஆம் வேதவாக்கு "சே... ......சே பிச்சைக்காரர்கள் தொல்லை அதிகமாய் போச்சே" இது அரசியல்வாதியின் அரசியல் நிறைந்த பேச்சு! இவனுடைய கூரலை காதிலே விழுந்தும் ஒன்றும் கூறாமல் சென்றனர் சில பாரி வள்ளல் கள். இவர்கள் யாவரும் மேல் நாட்டு நாகரிகத்தை தழுபவர் ஆகும். ஆனால் அவர்களுடைய பேச்சையும், குணத்தையும் கண் டால் இவர்கள் மனிதர்களா என்ற சந்தேகம் தோன்றுகிறது. என்ன பணமும் பட்டமும் அழகும் இருந்தும் குணம் இல்லையெனில் மிருகமே எனக்கூறுவர். இவர்களை எப்படி நாகரிக மானவர் எனக் கூறுவது! ஆகவே நாம் அநாகரிகர் என அவர்களை அழைக்க வேண் டிய அவசியம் வருகிறது.

மேனாட்டு நாகரிகத்தை தழுவிய பலரை ஏன் பலர் வெறுக்கின் றனர்? அதற்கு ஓரே பதில் மனித குணம் என்பது அவர்களிடம் இல்லை, என்பதே. ஆனால் மனித குணமானது நம் நாட்டு நாகரிகத் தில் ஓர் முக்கிய இடம் பெற்றுள்ளது. இதையே பலர் போற்று கின்றனர். ஆதலால் மனிதத்தன்மை ஒட்டிய நாகரிகமே உண்மை யான நாகரிகமாகும்.

கி. ஆறுமுகம்
IV. Form. A.

விடுகதைகள்

1. ஐந்து பேருக்கு மனைவி ஆவாள் திரௌபதி யில்லை. இரண்டு நாக்குடையாள் பாம்புமல்ல. அது என்ன ?
2. மதுரை மான் ஏரியிலே மான்வந்து நிற்குது கண்டடா பிடியடா களக்கயிறு போடடா அதை பிடித்தவர்க்கு எட்டு கவுளி வெற்றிலையும் எண்ணாயிரம் பாக்கும் கட்டிக்க பெண்டாட்டியும் கால் மிதிக்க வள்ளாட்டியும் நான் யார்?
3. பச்சை பல்லக்கு பாப்பார பல்லக்கு இரும்பாலே அடிச்சாலும் திரும்பாத பல்லக்கு. அது என்ன ?

விடைகள்

1. பேனா
2. கப்பல்
3. பிணம்

by M. D. Gopalan,

"எது நாகரிகம்?"

தலைமை தாங்கும் தலைவர் அவர்களே!

அன்பார்ந்த ஆசிரியர்களே!!

சங்கத்தின் அங்கத்தினர்களே!

'மகாமக'த்தைப்போலவும்' கும்பமேளாவைப்போலவும் மிகமிக அதிசயமாக நடத்தப்படுகின்ற இந்தத் தமிழ்க் கூட்டத்திலே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததின் மூலம் மகிழ்ச்சி அடைகின்ற நான் 'நாகரிக'த்தைப் பற்றி ஓரிறு வார்த்தைகள் கூறவிரும்புகின்றேன்.

'எது நாகரிகம்?' என்ற வினாவிற்கு நாம் பல் வேறு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பல் வேறுபட்ட விடைகளைத் தயாரிக்கமுடியும். உடை நாகரிகம்—உணவு நாகரிகம்—நடத்தை நாகரிகம்—கொள்கை நாகரிகம் என நாகரிகத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்துள்ளனர் நவீன காலத்து மக்கள். நற்குணம் படைத்தொழுகும் ஒவ்வொரு நாளது நற்செய்கைகளும் நாகரிகத்தின் சின்னங்கள்தாம்.

ஏகாதிபத்திய எரிமலையிலிருந்து அட்டூழிய அனல்கள் (ஆலகால விஷம்போல் குமுறி வரும் காலத்திலே) அட்டூழியத்தின் அஸ்திவாரங்களாகவும் அக்கிரமத்தின் அடிகோலியாகவும் அதர்மத்தின் அடையாளங்களாகவும் அநீதியின் அறிகுறிகளாகவும் உள்ள அரக்கர்களது பயங்கர வலைவீச்சிலே நாட்டு மக்கள் விழாவண்ணம் பாதுகாத்து, அஞ்சாநெஞ்சம் படைத்து அமர வாழ்வு பெற்ற அறிஞன் பகவத் சிங்கைப் போலவும்—தூக்குமேடையேறினும் தூயதேசபக்தியைவிடேன் எனமுரசுமுழக்கியமுன்னணி வீரன் கட்டபொம்மனைப்போலவும்—'அஹிம்சை! அது மனிதனது அந்தராத்மாவிற்கு அகமகிழ்வு அளிக்கும் அரியதொரு சாதனம்' என அகிலம் அறியச் செய்த அண்ணல் காந்திஜியைப்போலவும்—எவனொருவன் கொள்கை, கோட்பாடு இவைகளிலே எள்ளளவும் மாறாது எளிய வாழ்க்கை நடத்துகிறானோ அவனது கொள்கையும், கோட்பாடும், நடத்தையும், வாழ்வின் குறிக்கோள்களும் நாகரிகத்தின் சின்னங்கள்தாம் எனதிட்டவட்டமாகக் கூறலாம்.

* * * *

மாலை வேளையிலே, சிங்காரச்சோலையிலே—சிறகடித்துப் பறக்கும் சிட்டுக்குருவிகளும்—கானம்பாடிடும் வானம் பாடிகளும்—துள்ளி ஓடிடும் புள்ளிமான்களும்—வானத்தை வட்டமிடும் வன்னப் பறவைகளும் சூழ்ந்து நிற்கும் ஓர் சூழ்நிலையிலே—காலெடுத்து வைக்கிறான் சோலையிலே ஒரு கவிஞன்—

இயற்கையின் எழிலிலே தன் இதயத்தைப் பறிகொடுத்த அந்தப் பாவலனது உன்னத உயர்ந்த உள்ளத்திலிருந்து—உணர்ச்சிப்பெருக்குடன் உதயமாகும் உரிய கவிதையும் கவிதை கண்ட கவிஞனது கவித்திறனும் நாகரிகத்தின் சின்னங்கள்தாம்.

* * * *

அன்பர்களே! அணுகுண்டு உலகிலே அருமையாகச் சஞ்சரிக்கும் இந்த நவீன நவநாகரிக உலகிலே—ஒவ்வொரு நாட்டிலும்—ஒவ்வொரு விதமான நாகரிகம் நடைமுறையிலே இருக்கிறது.

ஏனைய நாடுகளது நாகரிகத்துக்கு பொதுப்படையான பொருளாதார வாழ்க்கைக்கும், நமது நாட்டு நாகரிகத்துக்கும் பொருளாதார வாழ்க்கைக்குமிடையே பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அந்நாடுகளெல்லாம் நாகரிகத்திலே, கலையிலே, பண்பாட்டிலே, வாணிபத்துறையிலே பொதுப்படையான பொருளாதார வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே முன்னேற்றத்திலே முன்னணி வீரர்களாக முகிழ்த்தனர் நமது முன்னோர்கள் என்பதற்கு ஆயிரக்கணக்கான ஆதாரங்கள் ஆரப்பாநகர்தனிலே ஆய்ந்தெடுக்கப்பட்டுள்ளன ஆராய்ச்சி இலாக்காவினரால்.

அந்த முன்னோர்களது காலத்திலே செம்மை செழிப்புடன் ஓங்கிய அந்த செம்மல்களது நேரத்திலே, இந்த மனிதக் கூட்டிலுள்ள உயிர் கோட்டை வாயிலிலே பறிபோனாலும் நாட்டைக் காப்பாற்றுவோம் என்று நாதஸ்வரம் முழங்கிய அந்த நாட்டன்பர்களது காலத்திலே கலைகள் தங்கின; கொலைகள் மங்கின. நன்மை பெருகியது; தீமை குறுகியது.

அன்பர்களே! இனி நமது நாட்டு நாகரிகத்திற்கு வருவோம். நமது நாட்டு நாட்டு நாகரிகம் மாடமாளிகைகளிலே மண்டிக்கிடக்கவில்லை, கூட கோபுரங்களிலே குவிந்து கிடக்கவில்லை. அணிமிக்க வீதிகளிலே அடைந்து கிடக்கவில்லை. அவை பெரும்பாலும் புதைந்துபோன புராதன நகர்களிலும், இடி சுவர்கொண்ட குடிசைகளிலே இனியதிரு வாழ்வு நடத்தும் ஏழைகளது கனிந்த உள்ளங்களிலும் காணப்படுகிறது,

* * * *

காலத்தின் கோலத்திலே நாகரிகத்திற்கு வேறு பொருள் கண்டனர் மக்கள். அணிமிக்க உடைகள், ஆடம்பர வாழ்வு, இரட்டைப் பின்னல்கள், பரப்பப்பட்ட பவுடர்—இவைகளே நாகரிகம் எனத் தவறாக நினைத்துவிட்டனர்.

வேற்றுமையைக் கிளப்பிவிடும் வேறு சில குழுவினர் மேனாட்டு பாணியே நாகரிகமெனக் கருதலாயினர்.

மேனாட்டு உடையும்—மேனாட்டு உணவும்—மேன்மைதரும் எனக் கனவு காணும் மேதாவிகளுக்கு நானொன்று சொல்ல விரும்புகின்றேன்.

நாகரிமென்றால் அது உடையிலும் உணவிலும் காண்பிக்கக்கூடிய விஷயமல்ல.

நஞ்சறியாத பிஞ்சுகளது நெஞ்சிலே வஞ்சகமாக தீநெறியைப் புகட்டும் திருடர் கூட்டத்தினரின் தில்லுமுல்லுகள் நாகரிகமல்ல

வீட்டிலொன்றும், வீதியிலொன்றும் பேசும் வீணர்களது விண்ணப்பங்கள் நாகரிகம் அல்ல.

தந்திரமான முறையில் மந்திரிமார்கள் வாங்கிக்கொடுத்த சுதந்திரமான சுதந்திரம் நிரந்தரமாகப் பயன் தரவேண்டுமென்று எண்ணமாற்றுத்திரியும் ஏகாதிபத்தியத்தினரின் எதிரொலிகள் நாகரிகமல்ல.

முன்பொருவாக்கும் பின்பொருவாக்கும் பேசும் முட்டாள்களது முழக்கங்கள் நாகரிகமல்ல.

பிஞ்சிலே பழுக்கத்துடங்கும் பித்தர்களின் பிற்போக்குக்கொள்கை நாகரிகமல்ல.

புரட்சி ஏற்படும் என மனப்பால் குடிக்கும் மண்டூகங்களது வரட்சியான புத்தி நாகரிகமல்ல

பின் எது நாகரிகம்? பின் நாகரிகம் என்று சொல்லப்படுவது எது?

அன்பர்களே! ஆராயவேண்டும். சிந்தனை செய்து பாருங்கள். சிந்தனைக்குச் சில வினாடிகள் இடம் கொடுத்துப் பாருங்கள் உங்கள் சித்தத்திலே.

* * * *

இவ்விதமான சிந்தனையிலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான செயல் நாகரிகமாகத்தோன்றும். ஆனால் அகிலத்தின் மதிப்புப் பெற்ற ஆய்ந்தறிந்த அறிஞர்களது அதி அற்புத அபூர்வ அதிசய ஆராய்ச்சியிலே ஆய்ந்தெடுக்கப்பட்ட அருமையான விஷயம் எது தெரியுமா?

"நன்னடத்தை—நற்குணம் இவைகளே நாகரிகம். இவைகளைக் கடைபிடிப்பவனே நாகரிகத்தை கடைபிடிப்பவன்" என்பதுதான்.

தீ நெறியைப் பறப்பும் திருடர் கூட்டத்திலும், கொள்கை வேறுபாட்டினால் கொலையையே கலையாகக் கருதிக் கொக்கரிக்கும் கொடும்பாவிகளால் கொலை செய்யப்பட்ட தியாகி ஒருவனுக்காக கொலை செய்தவர்களே நீலக் கண்ணீர் வடிக்கிறார்களே! அந்த நீசர்களது கூட்டத்திலும், எவனொருவன் சேராமல் நன்னடத்தையையும் நற்குணத்தையும் நாகரிகமென நடைமுறையிலே கொண்டுவரும் நல்லதொரு மானிடனே நாகரிகத்தைக் கடைபிடிப்பவனென்றும், எது நாகரிகமென்பதற்கு நன்னடத்தையும் நற்குணமுமே நாகரிகமென்றும் அறிவித்த வண்ணம் நானெனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

இரயில் சொப்பனம்

அன்று சனிக்கிழமை. பள்ளிக்கூடம் விடுமுறை. நான் அன்று எண்ணெய்தேய்த்துக் குளித்துவிட்டு முதல்நாள் வந்த 'கல்கி'யைக் கையில் எடுத்துக்கொண்டு போய்ப் படிக்க ஆரம்பித்தேன்.' — நான் படிக்க ஆரம்பித்து விட்டால் சுற்றுப்புறத்தில் நடப்பதை அறிய மாட்டேன். தவிர தூங்கியும் போய்விடுவேன். வழக்கம்போல சிறிது நேரம் கழிந்ததும் என்னை யறியாமலே என் கண்கள் மூடிக் கொண்டன.

கண்ணைத்திறந்தால் நான் எங்கள் ஊர் இரயில்வே ஸ்டேஷனில் — அதன்பெயர் நள்ளி — இறங்குகிறேன். அந்த ஸ்டேஷன், காட்டின் மத்தியில் அமைந்துள்ளது. அந்த ஸ்டேஷனிலிருந்து சுமார் 4, 5 மைல் சுற்றுப்புறத்திற்குப் பிறகு தான் கிராமங்களைப் பார்க்கலாம். அவ்வாறு வெகுதூரத்தில் அமைந்திருக்கும் கிராமங்களில் ஒன்று தான் எங்கள் ஊராகிய நாலாட்டின் பட்டி. இரயில்வே ஸ்டேஷனிலிருந்து $4\frac{1}{2}$ மைல் தூரமிருக்கிறது. நான் இரயில் செல்வதற்கு சீசன் டிக்கட் எடுத்திருந்தபடியால் முதலில் வெளியேவந்து என் ஊருக்கு யாராவது வருகிறார்களா என்று பார்த்தேன். ஒருவருமில்லை. அன்று இரயில் வழக்கத்திற்கு மாறாக ஒருமணி நேரம் தாமதமாக வந்தது. 6–30 P. M. க்கு வரவேண்டியது 7-30 க்குத்தான் வந்தது. நான் எப்பொழுதும் ஸைகிளில் வருபவன், ஸைகிள் பஞ்சராக இருந்தபடியால் அன்று கொண்டுவர முடிவில்லை.

ஸ்டேஷன் மாஸ்டரிடம் வழக்கம்போலச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வெளியே வந்து எங்கள் ஊர் வண்டிக்காரர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்று பார்த்ததில், அன்று இரயில் தாமதமாக வந்தபடியால் எல்லா வண்டிக்காரர்களும் போய்விட்டனர். பார்த்தேன். தனியாக நடந்து செல்வதைத் தவிர வேறுவழியைக் காணோம், இதில் இருட்டு வேறு, பாதையோ காட்டுப்பாதை ! என்ன செய்வது ! ஈசன் செயல்! என்று எண்ணியவனாய் வேகமாக நடக்க வாரம்பித்தேன் ! சுமார் 2 பர்லாங்குகள் நடந்திருப்பேன், பிறகுதான் மனதை பயம் கவ்வ ஆரம்பித்தது. மனது முன்னேக்கி இழுக்க, நெஞ்சு படபடக்க, தட்டுத் தடுமாறி நடந்து கொண்டிருந்தேன். பின்னும் சிறிது தூரம் சென்ற பின் எனக்கு முன் யாரோ இருவர் போவதைக் கண்டேன். அவர்கள் ஒருவேளை திருடர்களாக இருக்கலாமோ என்று எண்ணியவுடன் என் மனம் பட்ட பாட்டைச் சொல்லமுடியாது. அப்படியும் முன்வைத்த காலைப் பின்வைப்பதில்லை என்ற ஒரே எண்ணத்துடன் நடக்க ஆரம்பித்தேன். அவர்களையும் அடைந்தேன். அவர்களும் என்னைபம்போல் இரயிலிலிருந்து இறங்கிவரும் பிரயாணிகள் தான் எனக்கண்டேன். என் மனதிலிருந்த பயம் சிறிது நீங்கிற்று. அவர்கள் ஒரு வயதான மனிதரும்

அவரது மனைவியும் தான். நான் அவர்களை நோக்கி எங்கு செல்கிறீர்கள் எனக் கேட்டேன். அவர்கள் என் ஊருக்குப் போவதாகக் கூறவே நான் தைரியமடைந்தேன். அந்தப் பெரியவரிடம் "ஐயா! இந்த இருட்டில் நடந்து செல்கிறீர்களே! ஒரு வண்டிவைத்துக் கொண்டு செல்லக்கூடாதா? தவிரவும் இந்த வழியில் திருடர் பயம் அதிகமெ"ன்றேன். அதற்கு அவர் "தம்பி! வண்டி ஒன்றும் கிடைக்காதபடியால் நடந்தே செல்கிறோம்" என்றார். பிறகு இப்படியாகப் பேசிக்கொண்டு 1 மைலுக்கு மேல் நடந்தோம். அங்குதான் ஒரு பாலம் இருக்கிறது. அங்கு தான் எப்பொழுதும் திருடுகள் நடப்பது ஸகஜம்.

நான் நினைத்ததுபோலவே அந்த பாலத்தில் சுமார் 5, 6 பேர் உட்கார்ந்திருந்தனர். சந்தேகமில்லாமல் திருடர்கள் தான் — நான் அந்த பெரியவரின் மனைவியை உற்று நோக்கியதில் நிறைய நகைகள் அணிந்திருப்பதைக் கண்டேன். எனக்கு மறுபடியும் பயம் பிடிக்கவாரம்பித்தது.

அதே சமயத்தில் அந்தபாலத்தில் உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவன் எங்களை நோக்கிவந்தான் — நான் "சரி திருடர்கள் தான் இன்றோடு நாம் தொலைந்தோம்" என்று எண்ணியவனாய் நடந்தேன், என்னுடன் வந்தவர்கள் ஒன்றையும் கவனித்தார்களில்லை. வந்தவன் என்னை அணுகி "மரியதையாக சப்தம் போடாமல், தூரவிலகி நில்! இல்லையேல் உன்னைக் குத்தி விடுவேன்" என்று பய முறுத்திவிட்டு அந்த அம்மையிடம் சென்று நகைகளைக் கழற்றச் சொன்னான். அந்த சமயம் என்மனது பட்டபாடு! கடவுளே! கூட வந்தவர்களைக் கொள்ளையடிக்கப் பார்த்ததிலிருந்து பாத்துக்கொண்டிருப்பதா! என்று நினைத்தேன். கால்கள் மரம்போல் நின்றுவிட்டன. வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

மறு நிமிஷம் "டிரிங்க்! டிரிங்க்! டிரிங்க்" என்று வண்டியின் அலார மணியோசையும் அதைத் தொடர்ந்து வண்டிகள் உருளும் சப்தமும், மாட்டின் மணிச்சப்தமும் கேட்டது. அந்த வண்டியில் வந்தவர் எங்கள் ஊர் மிராசுதார் நல்லமுத்து முதலியார் தான். உடனே "திருடன்! திருடன்! பிடியுங்கள்" என்று என்னையுமறியாமல் கத்தினேன். பாலத்தில் உட்கார்ந்தவர்கள் போன இடம் தெரியவில்லை. — எங்களை பிடிக்க வந்தவன் காட்டிற்குள் புகுந்தான்.

"என்ன அண்ணா பகலில் திருடன் என்று உளருகிறாய். நல்லா தூங்கிட்டாயா என்ன? இந்த காப்பியை சாப்பிடு என்று என்னை எழுப்பினாள். விழித்தால் வண்டியையும் காணோம், கிழவர்களையும் காணோம் : : சரிதான் : சொப்பனம் தானா என்று சொல்லிக்கொண்டே என் தங்கை கொண்டு வந்த காபியை பருகினேன்.

R. Sundaram, IV. F. A.

கோபாலின் பரிசு

டங், டங், டங், டங் என்று மணி நான்கு அடித்தது. பள்ளியிலிருந்து மாணவர்கள் விரைவாக கூட்டம் கூட்டமாக வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தனர். அக் கூட்டத்திலே ஒருவனை கோபால் அங்கிருந்தவர்களை மிஞ்சிக்கொண்டு மிகவும் விரைவாக வீட்டைநோக்கி நடந்தான். வீடுபோய்ச் சேர்ந்ததும் கோபால் தனது புத்தகங்களை ஒருமூலையில் விசிறி எறிந்துவிட்டு அவனுடைய நன்பனை மாதுவின் வீட்டைநோக்கி நடந்தான். மாதுவீட்டிற்கு வந்து கொண்டிருந்த கோபால் ஏதோ காலடிசப்தம் கேட்டு திடுக்கிட்டு திரும்பிப்பார்த்தான். என்ன ஆச்சிரியம் அவனது நன்பனை ராமநாதன். ஆனால் ராமநாதன் வந்ததும் கோபாலுக்கு மனசஞ்சலிப்பு ஏற்பட்டது. ஏன் என்றால் தான் இத்தனைநாள் மாதுவைக் காணாமல் வருத்தமாக இருந்த சமயத்தில் இவன் வந்துசேர்ந்தானே என்ற வருத்தம்தான். இதை தன் மதி, நுட்பத்தால் யறிந்த ராமநாதன் கோபாலிடம் விடைப்பெற்று சென்றுவிட்டான். உடனே கோபால் மாதுவின் வீட்டை அடைந்தான். ஆனால் மாது வீட்டில் இல்லை. அவன் மாமாவைப்பார்க்க அவன்சென்றிருந்தான். உடனே கோபால் மனக்கசப்புடன் வீட்டிற்கு சென்றுவிட்டான். அன்றிரவெல்லாம் அவனுக்கு தூக்கமேவரவில்லை. எப்பொழுது பொழுது விடியப்போகின்றதோ மாதுவை எப்போது பார்பபமோ என்று அன்றிரவெல்லாம் நினைத்துக்கொண்டிருந்தான்.

மறுநாள் பொழுதுவிடிந்தது. அன்றுப் பள்ளி விடுமுறை. கோபால் மாதுவை சந்தித்துவிட்டு ரயிலடிக்குச் சென்றிருந்தான். ஏன் என்றால் தன் சித்தப்பா ஊரிலிருந்துவருவதாகத் தெரிவித்திருந்தார். அன்றுமாலை மணி ஆறு இருக்கும். ரயில் எழும்பூரில் வந்துநின்றது. ஓரேகூட்டம். அன்று கோபால்சித்தப்பா வரவில்லை. கோபால் நன்றாகதேடிவிட்டு வந்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒருகுழந்தை சுமார் 5 வயது இருக்கும். உயர்ந்த நகைகளை அணிந்து அழுதுகொண்டிருந்தது. இதைக்கண்ட ஒரு திருடன் இந்நகைகளை எப்படியாவது அடித்துக்கொண்டு போகவேண்டும் என்ற எண்ணத்துடன் அக் குழந்தையைஎடுத்து மடியில்வைத்துக் கொண்டு சமாதானப்படுத்திக்கொண்டு இப்படியும் அப்படியுமாக சுற்றிக்கொண்டிருந்தான். இதையெல்லாம் விடாமல் பார்த்துக் கொண்டிருந்த கோபால் தன்எதிரில் யாரோ ஒரு பெரியமனிதர் ஏதோ வருத்தத்துடன் அங்கும்இங்கும் கண்களை ஓட்டினார். உடனே கோபால் அவரிடம்சென்று நீங்கள் எதைத்தேடுகிறீர்கள் என்று கேட்டான். அதற்கு அவர் காரணத்தை விளக்கி கூறினார். உடனே கோபால் அவரை அழைத்துச்சென்று அத்திருடனை சுட்டி காட்



OUR SCHOOL.



OUR SECRETARY AT THE CRAFT EXHIBITION

CITIZENS ALL



OFF FOR THE BATH



CAN MASTERS RUN?

WON AT LAST

டினான். உடனே அத்திருடன் நழுவ பார்த்தான். ஆனால் அப் பெரியமனிதர் அக் கள்வனை பிடித்தார். இதற்கு கோபால் அருகில் இருந்த டெலிபோனை எடித்து போன் பண்ணிவிட்டான். போலிஸ் வண்டியில் பறந்துவந்தது. வந்து அக் கள்வனை பிடித்து விலங்கு போட்டு ஒரு வண்டியில் அத்திருடனையும் மற்றொரு வண்டியில் கோபாலையும், அந்தப்பெரிய மனிதரையும் ஏற்றிக்கொண்டு போலிஸ் ஸ்டேஷனுக்கு சென்றனர். உடனே அக் கள்வனுக்கு 6 வருஷ தண்டனை விதித்தனர். கோபாலனுக்கு 1000 ரூபாயைப் பரிசாக அளித்தனர். ஏன் என்றால் அத்திருடன் பல திருட்டுகளையும் கொலைகளையும் செய்தவன். கோபாலனுக்கும் அவர்கள் பெற்றோர் களுக்கும் இருந்த சந்தோஷத்தை கூறவும் வேண்டுமா.

இப்படிக்கு
தெ. பொ. ராமன்.
நான்காம் படிவம் 'ஆ' பிரிவு

விடுகதைகள்

1. முத்துகிருஷ்ணனை கூப்பிடுங்கள், முதுகுத் தோலை உரியுங்கள் பச்சை வெண்ணெயை தடவுங்கள், பாங்கான உள்ளில் அடையுங்கள்.
(வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை)

2. ஊசி போல் இலை இருக்கும், கமரிமா பூ பூக்கும், திங்கப் பழம் பழுக்கும், தின்காத காய் காய்க்கும்.
(வேப்ப இலை, பூ, பழம், காய்)

3. திண்டுக்கல்லை 2ஆக வெட்டி, திருச்சிராப்பள்ளியை 3ஆக மடக்கி வெள்ளை சார்ஜன்டை அதில் தடவி விசையை முறுக்கினால் இரத்தம் வரும்.
(வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு)

4. மழை சோ என்று பெய்ய, வெள்ளம் கரை புரண்டு வர நான்கு ராஜாக்கள் நனையாமல் வருகிறார்கள்.
(பசுவின்மடி)

R. Sundaram,
IV. Form-A,

ஆட்டுக்குட்டியின் தந்திரம்

ஒரு நாள் ஒரு காட்டில் ஒரு யானை தன் உணவைத்தின்று விட்டு மெதுவாக வந்தது. அப்பொழுது ஒரு சிங்கம் அன்று முழுவதும் உணவு கிடைக்காமல் மிகப்பசியுடன் அலைந்து திரிந்து கொண்டு அவ்வழியாக வந்தது. அச்சமயத்தில் சிங்கம் யானையைக் கண்டு ஓடோடியும் வந்தது. யானையும் சிங்கத்தைக் கண்டு ஓடியது. வழியில் ஒரு "ஆட்டுக்குட்டி" அந்த யானையைப் பார்த்து, பயத்திலும், உடல் பருமனிலும் எல்லா மிருகங்களைக் காட்டிலும் அதிகமான பலம் உள்ள யானையே எங்கே இவ்வளவு வேகமாக ஓடுகிறாய்? உனக்கு என்ன அபாயம் நேர்ந்தது? என்று கேட்டது. அப்பொழுது யானை என்னை ஒரு சிங்கம் துரத்திக்கொண்டு வருகிறது. இப்பொழுது நம் இருவருக்குமே அபாயம் நேரும் என்றது.

அதைக்கேட்ட "ஆட்டுக்குட்டி" நான் ஒரு தந்திரம் செய்கிறேன். அதன்படி நடந்தால் இந்த அபாயத்திலிருந்து நாம் இருவரும் தப்பிக்கொள்ளலாம் என்றது. யானை என்ன தந்திரம் அதற்கு ஒத்துக்கொள்ளுகிறேன் என்றது. ஆட்டுக்குட்டி யானையை இறந்த யானை போல் பாசாங்கு செய்து கீழே படுத்துக்கொள் என்றது. அவ்வாறே யானை செய்தது. ஆட்டுக்குட்டி அதன் மேல் ஏறி நின்றது. சிறிது நேரத்தில் யானையை துரத்திக் கொண்டு அச் சிங்கம் அவ்விடம் வந்தது. அப்பொழுது யானையின் மீது நின்று கொண்டிருந்த ஆட்டுக்குட்டியைப் பார்த்து சிங்கம் திடுக்கிட்டு சிறிது தூரத்திலேயே நின்றது. ஆட்டுக்குட்டி சிங்கத்தைப்பார்த்து "ஓ வனராஜாவே நான் ஒரு விரதம் பூண்டிருக்கிறேன். என்னவென்றால் 1000 யானைகளையும், 1000 சிங்கங்களையும் கொன்றுவிட்டு எமதர்மராஜா பதவியில் அடைய விரதம் பூண்டிருக்கிறேன் என்றது, ஆட்டுக்குட்டி. ஆனால் நான் இதுவரை 999 யானைகளையும், 999 சிங்கங்களையும கொன்று விட்டேன். இப்பொழுது 1000 வது யானையைக் கொன்று இதோ கீழே தள்ளி இருக்கிறேன் பார். ஆகையால் 1000 யானை பூர்த்தி யாய் விட்டது. ஆனால் சிங்கம் ஒன்றுதான் பாக்கி. அதற்காகத் தான் நான் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நீயும் தக்க சமயத்தில் இங்கு வந்தாய். நன்று! ஏன் அங்கேயே தயங்கி நிற்கிறாய் வா! சீக்கிரம்.

உன்னையும் நான் கொன்றுவிட்டு என் விரதத்தைப் பூர்த்தி செய்யப்போகிறேன் என்றது. அதைக்கேட்ட சிங்கம் ஆட்டுக்குட்டி சொன்னதை நம்பி தான் அவ்விடம் சென்றால் அது யானையைக் கொன்றது மல்லாமல் தன்னையும் கொன்றுவிடும் என்று பயந்து அவ் விடத்திலிருந்து ஓட்டம் பிடித்தது. வழியில் ஒரு நரி சிங்கத்

தைப் பார்த்து வனராஜாவே எங்கே இவ்வளவு வேகமாக ஓடுகிறீர் என்றது. அப்போது சிங்கம் நடந்ததைக் கூற அதைக் கேட்ட நரி ஆட்டுக்குட்டியாவது உன்னைக் கொல்லவாவது. நீ என்னுடன் வா. நான் உன்னை அழைத்துக் கொண்டு போகிறேன் என்று சிங்கத்தை யும், தன்னையும் ஒரு கயிற்றால் கட்டிக்கொண்டு அவ்விடம் நோக்கிச் சென்றது. அப்பொழுது அதைப் பார்த்த ஆட்டுக்குட்டி மறுபடி யும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மற்றொரு தந்திரம் செய்தது. ஆட்டுக்குட்டி நரியைப் பார்த்து "ஓ நரியே ஓடிப்போன சிங்கத்தை சீக்கிரம் என்னிடம் கொண்டுவா என்று அப்பொழுது சொன்னேன். ஏன் இவ்வளவு நேரம் ஆயிற்று. ஆகையால் நான் இப்பொழுது உன்னையும் அவைகளுடன் சேர்த்துக் கொல்லப்போகிறேன். என்றது ஆட்டுக்குட்டி.

இருவரும் வாருங்கள் இவ்விடம் என்றது. இதைக்கேட்ட சிங்கம் நரி தன்னை ஆட்டுக்குட்டியுடன் சேர்ந்துகொல்ல இங்கு தன்னை அழைத்துக்கொண்டு வந்தது என்று நினைத்து ஓரே ஓட்ட மாக ஓடியது. இதனால் சிங்கத்துடன் கயிற்றால் கட்டப்பட்ட நரியும் காடு, முள்ளு, செடி, கொடி முதலியவைகளில் விழுந்து அடித்துக் கொண்டு இறந்துபோயிற்று. கடைசியில யானையும் ஆட்டுக்குட்டி யும் தப்பி அவ்விடம் விட்டுச் சென்றது. யானை தன் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்ததற்காக ஆட்டுக்குட்டியை தன் முதுகில் ஏற்றிக்கொண்டு அதன் இருப்பிடத்தில் கொண்டு சேர்த்தது. அதற்கு ஒரு நன்றியையும் தெரிவித்தது. யானையும், ஆட்டுக் குட்டியும் அன்று முதல் சிறந்த நண்பர்களாக சுகமாக வாழ்ந்தன.

Jai Hind

R. SUNDARAM.
IV. From. A.

விடுகதை

1. பச்சை, பச்சை டாக்டர் பவளவாய் டாக்டர் குண்டுமணி டாக்டர் குதிரைவால் டாக்டர் அது என்ன?

(வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு, புகையிலை)

2. வட்ட, வட்ட, சின்னண்ணா வாயில்லாத சின்னண்ணா என்னை எழுப்புமண்ணா (மூட்டுப்பூச்சி

M. Viswanathan,
IV. Form-A.

ஜமீன்தாரின் மகள்

சுந்தரலிங்க ஜமீன்தார் என்றால் அந்த ஊரில் தெரியாதவர் ஒருவரும் இருக்கமாட்டார்கள். அவருக்கு ஒரே ஒரு செல்லமகள்தான் இருந்தாள். அவள் பெயர் காந்தா. அவர்கள் காந்தாவை தங்கள் கண் இமைபோல் பாவித்துவந்தார்கள். அவ்வளவு அன்பு!

ஒருநாள் மாலை நான்குமணி இருக்கும் சூரியன் மேற்குத் திசையிலே மங்கிக்கொண்டே வந்து செந்நிறவானம் காட்சியளித்தது. அந்த நேரத்தில் மிட்டாய்! மிட்டாய்!! என்று கத்திக்கொண்டே ஒரு மிட்டாய்க்காரன் சென்று கொண்டிருந்தான். பால் மாறாப் பருவத்தில் உள்ள காந்தா தன் மாளிகையின் வாசலில் நின்று தெருவில் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருந்தாள். அந்த மிட்டாய்க்காரன் ஜமீன்தார் வீட்டு வாசலுக்கு எதிராக நின்றுகொண்டு மறுபடியும் மிட்டாய்! மிட்டாய்!! குழந்தைகளா ஓடி வாங்கோ என்று கத்திக்கொண்டிருந்தான்.. அவனைச் சுற்றிக் குழந்தைகள் சூழ்ந்திருந்தன. ஆனால் காந்தா மெல்லப் படியை விட்டிறங்கி அம் மிட்டாய்க்காரன் அருகில் சென்று நின்றாள். அவள் கழுத்தில் ரத்தினம் இழைக்கப்பட்ட ஓர் அழகிய மாலை மின்னிக்கொண்டிருந்தது. சில நிமிடங்களில் மிட்டாய்க்காரன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தான். காந்தா சிறுவர்களோடு கூடவே வேடிக்கைப் பார்த்துக்கொண்டு அம் மிட்டாய்க்காரனுடன் சென்றுவிட்டாள்.

ஜமீன்தார் அப்பொழுது வீட்டில் இல்லை. எனவே காந்தா சென்றதை எவரும் கவனிக்கவில்லை. வெளியே சென்ற ஜமீன்தார் திரும்பி வீட்டிற்கு வந்ததும் காந்தா எங்கே என்று தன் மனைவியைக் கேட்டார். பிறகு தேடிப்பார்த்து காந்தா காணாததை அறிந்து ஜமீன்தாரும், அவரது மனைவியும் மன முடைந்து அழுதுகொண்டிருந்தனர். சில நிமிடங்கள் மௌனமாக இருந்த ஜமீன்தார் எழுந்து டெலிபோனை எடுத்துப் போலீஸுக்குப் போன் பண்ணினார்.

ம. சீனிவாசன்
நான்காம் அமைப்பு

கண்டுபிடி

1. சரசா மந்திரக்கோல் கொண்டுவா. (பூ)
2. பரமசிவா ஜிலேபி வேண்டுமா ? (மகாராஷ்டிர வீரன்)

விடை; 1. சாமந்தி. 2. சிவாஜி.

என் பள்ளி வாழ்க்கை

இதோ என்முன் விரிக்கப்பட்டிருக்கும் 'சர்டிபிகேட்' புத்தகம் பள்ளி வாழ்க்கைக்கு கடைசியாக முற்றுப்புள்ளி வைக்க கையெழுத்துப் போட வேண்டும். போட மனம் வரவில்லை. ஆம்! எப்படி வரும்? புதிதாக மணம் புரிந்த தம்பதிகள் விடைப்பெற்றுக் கொண்டு பெட்டியைத் தூக்கும்போது என்ன நடுக்கம் ஏற்படுமோ அதுபோல் என் கரம் கையெழுத்திட மறுக்கிறது. பேனாவும் எழுத மறுக்கிறது. ஏன் செய்வது? ஏனிந்த தயக்கம்?

பல ஆண்டுகளாகப் பள்ளியில் படித்து மாணவர்கள் மத்தியிலே ஆசிரியர்கள் அன்பிலே திளைத்து கல்வியைத் கசடறக் கற்றுப் பிரியும் நாள் வந்து விட்டது பள்ளியிலே பயின்ற படிப்பு பயனளிக்கப் போவதால் அவ்விடத்தைவிட்டு அகல வேண்டிய தினம் வந்து விட்டது. வருத்தம் அதிகமானதால் கையெழுத்திட மறுக்கிறது. இப்பள்ளியைவிட்டு ஒழியும் காலம் வராதா என்று ஏங்கித் தவித்தாலும் இக்கடைசி காலத்தில் நான் ஏங்கத்தான் செய்தேன். "இந்த உபாத்தியாயர் எனக்கு பிடிக்கவில்லை. என்ன படிப்புச் சொல்லுகிறார். இவர் வகுப்பில் தூக்கம்தான் வரும்" என்று கூறிய சொற்களை எல்லாம் மறந்து அந்த உபாத்தியாயரிடம் விடைபெற்றுச் சொல்லும் காலம் வந்து விட்டது. யாரை யாரை வெறுத்தேனோ அவர்களெல்லாம் எனக்கு வேண்டியவர்களாகி விட்டார்கள். என்ன தான் விரோதமிருந்தாலும் தம்பதிகளுக்கு வாழ்த்துக்கூறி அனுப்பும் பெரியவர்களைப்போல வாழ்த்துக்கள் வாங்கிக்கொண்டேன்.

காலை பத்து மணிக்குள் வந்து மாலை வரை பல கலைகளைப் பக்குவமாகப் பயின்றேன். தமிழ்—சொல்லிக் கொடுக்கும்போதே அதன் சுவையை அள்ளிப்பருகிக் கொண்டிருப்பேன். என் தமிழன்னை பக்கத்திலிருப்பதைப்போல் கவலையின்றிக் கற்று வந்தேன். பாடல்கள் படிக்கும்போது "இன்னும் படித்துக் காட்டமாட்டாரா இந்த ஆசிரியர்" என்று எண்ணுவேன். ஆங்கிலம்—இது கடல் கடந்து வந்த மொழி என்றாலும் கஷ்டத்தைக் கண்கொண்டு கவனிக்கவில்லை. எழுத்துக்கெழுத்து கதைபோல் விளக்கிச் சொல்லும்போது எப்படி மகிழ்ச்சி யுற்றிருப்பேன். அந்த மொழியும் என் நெஞ்சத்திலிறுத்திக் கொண்டது. கணக்கு—கடினமான பாடம். ஆனால் கனக்கச்சிதமாக ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும்போது அவைகளை ஞாபகப் படுத்திக்கொள்ளுமுன், அப்பப்பா! நான் பட்ட பாடு எழுத இடம் போதாது. விஞ்ஞானம்—அஞ்ஞானத்தைப் போற்றி மெஞ்ஞானத்தைப் புகுட்டும் நூலல்லவா இந்த விஞ்ஞானம். படிக்கப்படிக்கப் பரவசமூட்டும் பாடம். நானும் ஏதாவது புதிதாகக் கண்டு பிடிக்கவேண்டும் என்ற எண்ணம் விஞ்ஞானம்

படிக்கும்போது ஏற்படுகிறது. சோதனைகளை நேரிலே செய்து காட்டும்போது 'நான் ஓர் விஞ்ஞானி' என்ற நினைப்பிலேதான் மூழ்கியிருப்பேன். சமஸ்கிருதம்—சுலோகங்களென்ன, இலக்கணங்கள் என்ன என்று சலிப்பின்றி படித்துவிட்டேன். மற்றும் கைவேலை கற்கத்திரி போடும்போதுதான் என்ன தனி ஆனந்தம்! அளவிட முடியாது. சித்திரம் வரையும் பொழுதும், வர்ணங்களைத் தீட்டும் பொழுதும், பொழுது போவது தெரியவில்லை. படத்தை முடிக்காது திரும்பவும் மனம் வரவில்லை. விளையாட்டை எடுத்துக்கொண்டால் எழுதவும் வேண்டுமோ? சிறுவர் முதல் பெரியவர்கள் வரை எதை விரும்பியும் விரும்பாவிடினும் விளையாட்டை விரும்பாதவர்கள் எவரும் இருக்கமுடியாது என்பது திண்ணம். இவ்வித வாழ்க்கை அனுபவித்த எனக்கு அந்திய காலம் நெருங்கி விட்டது. என் மனத்திலே ஏற்பட்டது கலக்கம். ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வகுப்பிலிருந்து மற்ற வகுப்பிற்கு மாறும் போது போரிலே வெற்றியடைந்த வீரன் கொள்ளும் மகிழ்ச்சியைவிட அதிகமாகத்தானிருக்கும் நான் கொள்ளும் மகிழ்ச்சி.

வருந்திப் பயனென்ன? பிரியத்தானே வேண்டும். கடமை என்று எண்ணி, மனமே கவலை வேண்டாம். எங்கே உன் கையெழுத்து. இதோ என்று விடையளித்து போட்டேன். இல்லையில்லை போட்டே விட்டேன்.

அறிவு சான்ற ஆசிரியர்களே யாவருக்கும் வணக்கம். சென்று வருகிறேன். ஆசீர்வதியுங்கள். சென்று வருகிறேன்! வணக்கம். முடிந்தது என் பள்ளி வாழ்க்கை ஆனால் மறக்கமுடியாது என் வாழ்விலே!

S. LAKSHMANAN,
[old student]

துணுக்கு

முதல்வன் :—டேய் நம்ம பிள்ளையார் கோவிலிலே வாழைப் பழம் சூறை விடுகிறார்களாம்டா.

இரண்டாம் மனிதன் :—என்னடா ? வாழைப்பழமா! உரிச்சா உரிக்காதவா ?

மு :—என்னப்பா அப்படி கேட்கிறே.

இர :—இல்லேடா உரிச்சதா இருந்தா வாயை திறந்துகொண்டிருந்தா சூறைவிடும்போது வாயிலேயே வந்து விழுந்திடும் பாரு.

P. Adikesavalu, V-B.

உபதேச குறை

ஒரு ஊரில் ஒரு பணக்காரர் இருந்தார் அவருக்கு ஒரு பிள்ளை. பையன் எல்லா விஷயத்திலும் கெட்டிக்காரனாக இருந்தும் ஒரே ஒரு வழக்கம் மட்டும் பிடிவாதமாக வைத்துக்கொண்டிருந்தான். அவனுக்குத் தித்திப்பு மிகவும் பிடிக்கும். ஆதலால் அவன் ஏராளமாக வெல்லம் தின்றுவந்தான். தந்தை எவ்வளவு சொல்லியும் பையன் கேட்கவில்லை. ஒருநாள் குருவின் வீட்டுக்குத் தன் மகனை அழைத்துச் சென்றார்; குரு இந்த விஷயத்தை அறிந்தார்.

